திராவிடத்தால் வாழ்கிறோம்

1229

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்



- வாழ்வோம்

பிறப்பொக்கும் எல்லா முறுக்கும்!

‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ என்ற வள்ளுவரின் வாக்குதான் தங்கள் கட்சியின் கொள்கை என்று ஏமாற்றி ஆட்சிக்கு வந்த த.வெ.க. ஆட்சியின் ஒரு மாதக் கூத்துகளைப் பார்த்தால், அய்யன் திருவள்ளுவரே ஓலைச்சுவடியால் நம் சி.எம். சார் தலையில், ஒரு போடு போடுவார். அதோடு, இதோ இதுபோல் சில புதுக்குறள்களும் எழுதுவார்.

கோட்டுபோட்டு வாழ்வாரே வாழ்வார் மக்களோ
ஓட்டுபோட்டு நோவாரே இன்று.

ஓரசக்தி தூரசக்தி என்றெல்லாம் உளறும்குதிரை
பேரசக்தியே தீயது என்றுணர்.

முறுக்குக்கே பர்த்சர்ட்டிபிகேட் கேட்டு கிறுக்குப்
பிடிக்க வைப்பாரே அறநிலையஅமைச்சர்.

சிங்கப்பெண்படை ஒருபுறம் சேலம்ஸ்ரீவைகுண்டம் த.வெ.க.
அசிங்க ஆண்படையானதே இன்று.

இட்டுக்கினு போயி இட்டுக்கினு வந்தா
புட்டுக்கினு போகுமே நாடு.

மின்சாரம் இல்லாமல் தவிக்கின்ற மக்கள்
சம்சாரம் பிள்ளையோடு தெருவில்.

குழல்இனிது யாழ்இனிது என்பார் தம்அமைச்சர்
‘நோ கமென்ட்ஸ்’ கேட்கா தவர்.

தோன்றின் ரீல்ஸோடு தோன்றுக அஃதிலார்
ஆய்வே வீண் என்றுபொருள்.

ஊடகத்தைக் கண்டாலே ஓடிப்போகும் சி.எம்.சார்
பாதகமே விளைவைத் தரும்.

வாயில நல்லாவருது என்றவர் அசெம்பிளியில்
போனாரே சைலேன்ட் மோடில்.

வாக்கு இயந்திரத்தில் முறைகேடா?

மேற்கு வங்கத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றிபெற்று ஆட்சியமைத்துள்ள நிலையில், அங்கு சில பகுதிகளில் பதிவான வாக்குகள் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளன. இது தொடர்பாக, ‘ஆல்ட் நியூஸ்’ ஊடகம் வெளியிட்டுள்ள கள ஆய்வுச் செய்தியில், ‘மேற்கு வங்கத்தின் ராஜர்ஹட் நியூ டவுன் தொகுதியில் உள்ள வாக்குச்சாவடி 164-இன் முடிவு, அப்பகுதி மக்களிடையே, எதிர்க்கட்சித் தலைவர்களிடையே, அரசியல் பணியாளர்களிடையே பல கேள்விகளை எழுப்பியுள்ளது. 88% வாக்காளர்கள் முஸ்லிம்கள் உள்ள வாக்குச்சாவடியான 164-இல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இந்திய மதச்சார்பற்ற முன்னணியின் (ISF) கூட்டணி வேட்பாளரான சப்தர்ஷி தேப் வெறும் ஒரு வாக்கு மட்டுமே பெற்றுள்ளார். திரிணாமுல் காங்கிரஸ் வேட்பாளர் தபாஷ் சட்டர்ஜி 5 வாக்குகள் பெற்றுள்ளார். ஆனால், பா.ஜ.க. வேட்பாளரான ஃபியூஷ் கனோடியா 656 வாக்குகளில் 637 வாக்குகளைப் பெற்றுள்ளார்.

அருகில் உள்ள வாக்குச்சாவடி 165-இல் பா.ஜ.க. வேட்பாளர் 32 வாக்குகள் மட்டுமே பெற்றார். சி.பி.எம்.-ஐ.எஸ்.எஃப். கூட்டணி 299 வாக்குகளும், திரிணாமுல் 290 வாக்குகளும் பெற்றன. இரு வாக்குச்சாவடிகளிலும் ‘முசல்மான் பரா’ முஸ்லிம்களே பெரும்பான்மை வாக்காளர்களாக உள்ளனர். இரு வாக்குச்சாவடிகளிலும் இவர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் கலந்துள்ளனர். 164-வது வாக்குச்சாவடியில் 52 வாக்குகள் கூடுதலாகப் பதிவாகி இருந்ததாக சர்ச்சை எழுந்தது.

மாதிரி வாக்குப்பதிவுகள் நீக்கப்பட்டதா, இல்லையா என்பது தெளிவாகத் தெரியவில்லை. பல கட்சிகளின் முகவர்கள் சேர்ந்து ‘வி.வி.பேடு’ எண்ணிக்கையை ஒப்பிட்டு சரிபார்க்க அறிவுறுத்திய தால், அங்கு மட்டும் முடிவுகள் வெளியாக ஒரு நாள் தள்ளிப்போனது. இறுதியில், வாக்கு எண்ணிக்கை 17 சுற்றுகளில் இருந்து 18 சுற்றுகளாக மாறியது. முதல் நாள், தபாஷ் சட்டர்ஜி 316 வாக்குகள் முன்னிலையில் இருந்த நிலையில், அந்த இறுதிச்சுற்றுக்குப் பிறகு, நிலைமையே தலைகீழானது. பா.ஜ.க. வேட்பாளர் கனோடியா 316 வாக்குகள் வித்தியாசத்தில் வென்றார்’ என்கிறது அச்செய்தி.

மேலும், ‘ஆல்ட் நியூஸ்’ செய்தி நிறுவனத்துக்குப் பேட்டி அளித்த 164-வது வாக்குச்சாவடிக்கு உட்பட்ட முஸ்லிம்கள் பலரும் ‘தாங்கள் பா.ஜ.க.விற்கு வாக்களிக்கவில்லை’ என்றே கூறியுள்ளனர். பிறகு எப்படி, பா.ஜ.க. அங்கு வென்றது என்ற கேள்வி வலுத்துவருகிறது.

அடடே.. ஆச்சரியக்குறி!

ஃப்ளாஷ்பேக்

எம்.சண்முகம்

தலைவர் தந்த கைக்கடிகாரம்!

2014-ஆம் ஆண்டில், அரசு சார்பில் நடத்தப்பட்ட இரத்த தான முகாமில் கலந்துகொண்டு, உயிருக்குப் போராடும் நோயாளிகளுக்கு இரத்தக்கொடை அளித்தேன். எனது செயலினைப் பாராட்டும் வகையில், அன்றைய கழகப் பொருளாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்கள் கைக்கடிகாரம் அளித்துப் பாராட்டினார். தலைவர் கையால் பரிசு பெற்றது, மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது.

- எம்.சண்முகம்,
37-வது வட்டப் பொருளாளர்,
பெரம்பூர் வடக்குப் பகுதி, சென்னை வடக்கு.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

கருவூலம்

‘இறுதி வெற்றி நமக்கே-அஞ்சேல்’!

“தி.மு.கழகம் எதிர்த்து வந்த வெள்ளம் என்ன சாமானியமானதா, அல்ல அல்ல. கழகத்தின்மீது வீசிய பொறாமைப் புயல், அடக்கு முறைப் புயல், ஏளனப் புயல், எதிர்ப்புப் புயல், என்ன கொஞ்ச நஞ்சமா? அத்தனை எதிர்ப்பு வெள்ளத்தையும் எதிர்நீச்சல் அடித்துத்தான், புயல்களைத் தாங்கிக்கொண்டுதான், இன்று தி.மு.கழகம் எல்லோரின் கவனத்தையும் கவரும் கழகமாக வளர்ந்திருக் கிறது. இன்று தி.மு.கழகம், நம் நாட்டில் நிலைத்துவிட்ட ஒரு ஜனநாயக அமைப்பு. இதை உணர்ந்துகொள்ள மறுப்பவர்கள், நாட்டின் உண்மை நிலை அறியாதவர்கள்! உணர்ந்தும், வெளியே சொல்ல வெட்கப்படுபவர்கள். ஆத்திரக்காரர்களின் ஆர்ப்பரிப்பும் சாகசமும் மாறி மாறிக் கொட்டியபடி உள்ளன. திராவிடம் எதையும் தாங்கிக்கொள்ளும் உரம் படைத்திருக்கிறது, எனவே, இறுதி வெற்றி நமக்கே – அஞ்சேல்!”

- பேரறிஞர் அண்ணா - நம்நாடு 23.08.1954

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900